# QB365 Question Bank Software Study Material

## குடிமையியல் - சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 51

**2 மதிப்பெண் வினாக்கள்**

13 x 2 = 26

1) சமயச்சார்பின்மையை பரப்பிட பங்களித்த சில இந்தியர்களது பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** இராஜாராம் மோகன்ராய், சர் சையது அகமது கான், இரவீந்தரநாத் தாகூர், மகாத்மா காந்தி மற்றும் பி.ஆர். அம்பேத்கர் போன்ற குறிப்பிடத்தக்க பெரும் மரியாதைக்குரிய தனிநபர்கள் இந்தியச் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் சமயச் சார்பின்மையை பரப்ப பங்களித்துள்ளனர்.

2) சமயச்சார்பின்மை என்பது எதனைக் குறிக்கிறது?

**பதில் :** சமயச்சார்பின்மை என்பது பிற மதங்களின் பால் சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு மனப்பாங்கு ஆகும்.

3) சமயச்சார்பின்மையின் நோக்கங்களைக் கூறுக

**பதில் : சமயசார்பின்மையின் நோக்கங்கள்:**

1. ஒரு சமயம் சார்ந்த குழு மற்றொரு சமயக்குழுவின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
2. ஒரு சமயத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் அதே சமயத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
3. அரசானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் பின்பற்ற வலியுறுத்தாமல் இருப்பது அல்லது தனி நபர்களின் மத சுதந்திரத்தை பறிக்காமல் இருப்பது.

4) அரசிடமிருந்து சமயத்தை பிரிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது ஏன்?

**பதில் :** 1. இந்தியாவில் அனைத்து சமயங்களையும் சமமாக நடத்த வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே சமயச் சார்பின்மை கோட்பாடு படிப்படியாகத் தோன்றியது.
2. பல்வேறு சமயக் கோட்பாடுகளைக் கொண்டுள்ள மக்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பராமரிக்க நமக்கு சமயச் சார்பற்ற நாடு அவசியமாகும். அது சம உரிமைகளையும் வழங்கும் மக்களாட்சியின் ஒரு பகுதி ஆகும்.

5) சமயச்சார்பற்ற நாட்டின் சிறப்புப் பண்புக் கூறுகள் யாவை?

**பதில் : சமய சார்பற்ற நாட்டின் பண்புகள்:**

1. சுதந்திர கோட்பாடு எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்.
2. சமத்துவக் கோட்பாடு - அரசு எந்த ஒரு சமயத்திற்கும் மற்றவற்றிற்கு மேலாக முன்னுரிமை அளிக்காதிருத்தல்.
3. நடுநிலைமைக் கோட்பாடு - சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை கொண்டிருத்தல்.

6) சமயச்சார்பின்மை தொடர்பான இந்திய அரசியலமைப்பு பிரிவுகள் மூன்றினைக் குறிப்பிடுக

**பதில் :** 1. பிரிவு - 15 சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடை செய்கிறது.
2. பிரிவு - 16 பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்.
3. பிரிவு -26 சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்.

7) கவிஞர் இக்பால் அவர்களின் வாக்கியம் எதை விளக்குகிறது?

**பதில் :** (i) "சமயம் நமக்குப் பகைமையைப் போதிக்கவில்லை. நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு" என்ற கவிஞர் இக்பாலின் எளிய வாக்கியம் சமயச்சார்பின்மை கருத்தை விளக்குகிறது.

8) அசோகரின் 12 வது பாறை அரசாணை பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** (i) அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டிலேயே அறிவித்த முதல் பேரரசர் அசோகர் ஆவார்.
(ii) தனது 12 வது பாறை அரசாணையில் அனைத்து மதப்பிரிவினருடன் சகிப்புத் தன்மையோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்க்குக் கொள்ளவும் தம் மக்களுக்கு வேண்டுகோள்

அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக் கொள்ளவும் தம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

9) இந்தியா ஒரு சமயச்சார்பின்மை உள்ள நாடு என்பது பற்றி சிறுகுறிப்பு வரைக.

**பதில் :** (i) இந்தியா பல சமய மற்றும் கலாச்சார பண்பாட்டு நம்பிக்கைகள் கொண்ட நாடாகும்.
(ii) இது இந்து, சமணம், புத்தம் மற்றும் சீக்கியம் ஆகிய நான்கு பெரும் சமயங்களின் பிறப்பிடமாகும்.
(iii) நமது நாட்டில் பல்வேறு சமயங்கள் மற்றும் நம்பிக்கைகள் கொண்ட மக்கள் நீண்டகாலமாக அமைதியுடன் வாழ்கின்றனர்.

10) அசோகரின் 12வது பாறை அரசாணை குறிப்பு வரைக.

**பதில் :** 1. அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டிலேயே அறிவித்த முதல் பேரரசர் அசோகர் ஆவார்.
2. தனது 12வது பாறை அரசாணையில் அனைத்து மதப்பிரிவினருடன் சகிப்புத்தன்மையோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக்கொள்ளவும் தம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

11) அக்பரின் மதசகிப்புத்தன்மை கொள்கையை விவரி.

**பதில் :** முகலாய பேரரசர் அக்பர் மதசகிப்புத்தன்மை கொள்கையைப் பின்பற்றினார். அவருடைய தீன்-இலாஹி (தெய்வீக நம்பிக்கை) மற்றும் சுல்-இ-குல் (அனைத்து சமயத்தினரிடையே அமைதி மற்றும் நல்லிணக்கம்) ஆகியவை அவரின் சமய சகிப்புத் தன்மையை எடுத்தியம்புகிறது.

12) சமத்துவக் கோட்பாடு என்றால் என்ன?

**பதில் :** அரசு எந்த ஒரு சமயத்திற்கும் மற்றவற்றிற்கு மேலாக முன்னுரிமை அளிக்காதிருத்தல்.

13) கஜூராஹோவில் காணப்படும் கோவில் அமைப்பை பற்றிக் கூறுக.

**பதில் :** கஜூராஹோவில் காணப்படும் 19ம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோவிலில் வழக்கமான சிகரத்திற்குப் பதிலாக இந்துபாணியிலான கோபுரம், சமண விதானம், புத்த ஸ்தூபி மற்றும் இஸ்லாமிய பாணியிலான குவிமாடம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

## <u>5 மதிப்பெண் வினாக்கள்</u> 5 x 5 = 25

14) சமயச்சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை?

**பதில் :** கல்வியில் சமயசார்பின்மை என்பது பொதுக்கல்வியை அனைத்து சமய ஆதிக்கத்திலிருந்தும் விடுவிப்பதாகும் வருங்கால குடிமக்களாகிய குழந்தைகள் சமய தொடர்பில்லாமல் அவர்களின் பண்புநலன் மற்றும் தார்மீக நடத்தை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையிலான கல்வியையே பெறவேண்டும். சமயசார்பற்ற கல்வி கீழ்க்காணும் நோக்கங்களுக்காக தேவைப்படுகிறது.
1. குறுகிய மனப்பான்மையை போக்குவதற்கும், சக்தி வாய்ந்த ஆற்றல் மற்றும் அறிவான நோக்கத்தினை உருவாக்குவதற்கும்,
2. தார்மீக மற்றும் மனிதநேய பார்வையை உருவாக்குவதற்கும்,
3. இளைஞர்களை நல்ல குடிமக்களாக்க பயிற்சியளிப்பதற்கும்,
4. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் கூட்டுறவு வாழ்க்கை போன்ற மக்களாட்சியின் மதிப்புகளை பலப்படுத்துவதற்கும்,
5. வாழ்க்கை குறித்த பரந்த பார்வையை அளிப்பதற்கும்,
6. பிறரை பாராட்டுதல் மற்றும் மற்றவர் நிலையிலிருந்து புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பதற்கும்
7. அன்பு, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு, சமத்துவம் மற்றும் இரக்க உணர்வை வளர்ப்பதற்கும்
8. பொருள் முதல்வாத கொள்கை மற்றும் ஆன்மீக கொள்கையை ஒருங்கிணைக்கவும் தேவைப்படுகிறது.

15) இந்தியா போன்ற நாட்டிற்கு சமயச்சார்பின்மை அவசியம் – நிரூபிக்கவும்.

**பதில் :** இந்தியா போன்ற நாட்டிற்கு சமயச் சார்பின்மை அவசியம்:

1. சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. பின்னர் 1976 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 42வது சட்டத்திருத்தத்தின் மூலம் முகவுரையில் சமயச்சார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது. (இந்தியா ஒரு இறையாண்மை வாய்ந்த, சமதர்ம, சமயச் சார்பற்ற, மக்களாட்சி குடியரசு).
2. நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கமானது தேசிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் தனி மனித மாண்புடனும் கண்ணியத்துடனும் ஊக்குவிப்பதாகும்.
3. நாட்டிற்கான தனி சமயம் எதுவும் இந்தியாவில் இல்லை. அரசானது எந்தவொரு சமயத்தையும் ஏற்படுத்தவோ ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு சிறப்பு ஆதரவினையோ அளிப்பதில்லை.
4. இந்திய அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் நாட்டு குடிமக்கள் மட்டுமின்றி இந்தியாவில் வாழும் வெளிநாட்டவருக்கும் வழங்கப்படுகிறது.
5. இது 1954-ல் நடைபெற்ற பம்பாய் மாநிலம் ரத்திலால் வழக்கில் மாண்புமிகு உச்சநீதி மன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

16) சில சமயக் குழுக்கள் தங்களது சமயம் நரபலியை அனுமதிக்கிறது என்று கூறினால் அரசாங்கம் அவர்கள் கொள்கையில் தலையிடுமா?

**பதில் :** அரசாங்கம் நிச்சயமாக தலையிடும். ஏனெனில் எந்தவொரு உயிரினத்தையும் கொல்ல எந்த சமயமும் கற்பிக்கவில்லை. கருணை என்பது எல்லா மதங்களுக்கும் வேர். நம் நாட்டின் சட்டம்கூட ஒரு மனிதனைக் கொல்வது சட்டவிரோதமானது என்று அறிவிக்கிறது. இது மனித உரிமைகளுக்கு எதிரானது.

17) உனது பள்ளி நாட்காட்டியில் உள்ள விடுமுறை நாட்களை கவனி. அவற்றில் வெவ்வேறு சமயங்களுடன் தொடர்புடையவை எவை? அவற்றை சமயங்களின் அடிப்படையில் பட்டியலிடுக. அது எதனைக் குறிக்கிறது?

**பதில் :** (i) தீபாவளி - இந்து பண்டிகை

(ii) பக்ரீத், ரம்ஜான், மொஹரம் - முஸ்லீம் பண்டிகை

(iii) கிறிஸ்துமஸ், புனித வெள்ளி - கிறிஸ்தவர்கள் பண்டிகை

18) இந்திய அரசியலமைப்பு பிரிவுகளில் ஏதேனும் ஏழு பற்றி எழுதுக.

**பதில் :**

| | | |
|---|---|---|
| (i) பிரிவு 15 | : | சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடை செய்கிறது. |
| (ii) பிரிவு 16 | : | பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பு அளித்தல். |
| (iii) பிரிவு 25 (1) | : | எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் பரப்பவும் உரிமை வழங்குகிறது. |
| (iv) பிரிவு 26 | : | சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம். |
| (v) பிரிவு 27 | : | எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் ஆதரிக்க அரசானது எந்தவொரு குடிமகனையும் வரி செலுத்துமாறு வற்புறுத்தக் கூடாது. |
| (vi) பிரிவு 28 | : | சில நிறுவனங்களில் மதம் சார்ந்து நடைபெறும் சமய போதனைகள் அல்லது சமய வழிபாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை. |
| (vii) பிரிவு 29 (2) | : | அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாகுபாடு காட்ட தடை போன்றவை ஆகும். |